DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.39/2025**

**2026-ம் ஆண்டு பிப்பரவரி திங்கள் 05- ம் நாள்வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.01 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 01 | தொழில் | - | தலைமை காவலர் 1389 |
| பெயர் | - | திரு.சரவணன் | வட்டம் | - | பொள்ளாச்சி |
| த/பெ | - | ராமசாமி | சமயம் | - | |
| கிராமம் | - | டவுன் கிழக்கு காவல் நிலையம், பொள்ளாச்சி | வயது | - | 45/2026 |
| சாதி | - | | | | |

**<u>05-02-2026</u>**

**( எதிரி ஆஜர்)**

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது பொள்ளாச்சி டவுன் கிழக்கு காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.10.2025-ம் தேதி மதியம் 14.30 மணிக்கு ஷேக்கல்முடி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்த போது முடீஸ் காவல் நிலைய உதவி ஆய்வாளர் (பொறுப்பு) ஷேக்கல்முடி காவல் நிலையம் திரு.குணசேகரன் அவர்களுக்கு உதவியாக நானும், தலைமைக் காவலர் 1534 திரு.கார்த்திகேயன் ஷேக்கல்முடி காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட சேடல் டேம், பெரியார் நகர், உருளிக்கல் ஆகிய பகுதிகளில் மதுவிலக்கு மற்றும் சூதாட்டம் சம்பந்தமாக கண்காணித்து வந்தபோது உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி 14.30 மணிக்கு உருளிக்கல் அரசு நடுநிலைப்பள்ளி பின்புறமுள்ள தேயிலைகாட்டில் கண்காணித்தபோது அங்கு கையில் பச்சைநிற அரிசி பையுடன் நின்றுகொண்டிருந்த ஒரு நபர் போலீஸ் பார்ட்டியாகிய எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரிக்க தனது பெயர் பெருமாள் (வயது 61), த/பெ.பழனி 19/39, உருளிக்கல் U.D வால்பாறை எனக் கூறி தனது பையில் வைத்திருந்த சுமார் 180 மி.லி அளவுகொண்ட 1. All Gold VSP brandy என லேபிள் ஒட்டப்பட்ட 25 பாட்டில்கள், 2. Honey Day என லேபிள் ஒட்டப்பட்ட 18 பாட்டில்கள், 3. Copper என லேபிள் ஒட்டப்பட்ட ஒரு பாட்டில் மொத்தம் 44 பாட்டில்கள் ஆகியவற்றை உதவி ஆய்வாளர் விசாரிக்க தான் சுயலாபம் கருதி அரசு அனுமதியின்றி விற்பனை செய்ய வைத்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை காரணம் கூறி 14.45 மணிக்கு உதவி ஆய்வாளர் கைது செய்ய நாங்கள் உதவியாக இருந்தோம். பின்பு 15.00 மணிக்கு உதவி ஆய்வாளர் எதிரியிடமிருந்து தடய பொருள்களை கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்ய உதவியாக இருந்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான் **(அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் எதிரியுடன் 15.30 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண் 25/2025, ச/பி 4 (1) (C) TNP Amendment Act 2024 ன் படி உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய நாங்கள் உதவியாக இருந்தோம். பின்னர் எதிரியை பாராவசம் ஒப்புவித்து தக்க இரு நபர் ஜாமீனில் விடுவிக்க உதவியாக இருந்தோம். வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை

விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

ரோந்து பணிக்கு நாங்கள் ஷேக்கல்முடி காவல் நிலையத்திலிருந்து புறப்பட்டோம் என்றால் 14.30 மணிக்கு கிளம்பினோம். 14.30 மணிக்கு ரோந்து பணிக்கு புறப்பட்ட நான் கேண் புக்கில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். அந்த புக்கை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் தேவைப்படும் பட்சம் நீதிமன்றத்தில் ஒப்படைக்க தயாராக உள்ளேன். சோலையார்டேம், உருளிக்கல், பெரியார் நகர் ஆகிய இடங்கள் எவ்வளவு துாரத்தில் உள்ளது என்றால் சுமார் 5 கிலோ மீட்டர் துாரத்திற்குள் மூன்று இடங்களும் உள்ளது. ஷேக்கல்முடி காவல் நிலையத்திலிருந்து சம்பவயிடமான உருளிக்கல் அரசு உயர்நிலையப்பள்ளி எவ்வளவு துாரத்தில் உள்ளது என்றால் சுமார் 7 கி.மீ.துாரம் இருக்கும். நாங்கள் மூவரும் எந்த வண்டியில் சென்றோம் என்றால் அவரவர் சொந்த வண்டியில் சென்றோம். இதனை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளோமா என்றால் இல்லை. உண்மையிலேயே நாங்கள் ரோந்து பணிக்கு சென்றிருந்தால் எங்களது சொந்த வண்டியில் சென்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியிருப்போம் என்றால் சரியல்ல. ரோந்து பணிக்கு நாங்கள் செல்லவே இல்லை என்றால் சரியல்ல. சம்பவயிடத்திற்கு நாங்கள் எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் சுமார் 15 மணியளவில் சென்றிருப்போம். உருளிக்கல் அரசு உயர்நிலை பள்ளியில் எத்தனை ஆசிரியர்கள் இருப்பார்கள் என்று விசாரித்தோமா என்றால் அது பற்றி விசாரிக்கவில்லை. உயர்நிலைப்பள்ளி பின்புறம்உள்ள தேயிலை காட்டில் எத்தனை பேர் வேலைசெய்துகொண்டிருந்தார்கள் என்று விசாரித்தோமா என்றால் அங்கு யாரும் வேலை செய்யவில்லை. எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தோமா என்றால் இல்லை. உண்மையிலேயே வழக்கு சம்பவம் நிகழ்திருந்தால் நாங்கள் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றிருப்போம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் எந்த கடையில் வாங்கியது என்றால் சார்பு ஆய்வாளருக்குதான் தெரியும் எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்களான மதுபாட்டில்கள் அரசு மதுபானக்கடையில் கிடைக்கக்கூடியது என்றால் சரிதான். நான் சொன்னது போல எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரியை காவல் நிலையத்திற்கு வரவழைத்து அங்கு வைத்து கையொப்பம் பெற்று கைதுசெய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. சம்பவயிடத்திற்கும், உருளிக்கல் பஸ்ஸ்டாப்பிற்கும் இடையே எத்தனை கடைகள் உள்ளது என்றால் கடைகள் எதுவும் இல்லை. சம்பவயிடத்திற்கு அருகில் கடைகள் உள்ளது நான் வழக்கிற்காக இல்லை என்று தவறாக சாட்சியமளிக்கின்றேன் என்றால் சரியல்ல. சம்பவயிடத்தில் எதிரியை கைதுசெய்திருந்தால் அருகில் இருந்த பள்ளியில் உள்ள ஆசிரியர்களை நான்சாட்சியமாக விசாரித்திருப்போம் என்றாலும் சம்பவயிடம் செல்லாமலேயே எதிரிக்கு எதிராக இவ்வழக்கு தவறாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புள்ளியல் விவரத்திற்காக இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் அல்ல என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u> :** இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி.N.மீனாட்சி
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.